# ஆதித்தமிழர் பேரவை – விளாத்திகுளம் ஒன்றியம்

மே 27, 2010 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் விளாத்திகுளம் பேரூந்துநிலையம் அருகில் ஊராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகத்தை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் நடைபெற்றது. இந்த ஆர்பாட்டத்திற்கு விளாத்திகுளம் ஒன்றிய செயலர் திரு.க.திலீபன் தலைமை தாங்கினார். வரவேற்புரை தோழர். செ.முத்துராஜ் வாசித்தார். கண்ட உரை நிகழ்த்தியவர்கள் மாநில துணைப் பொதுச்செயலர் திரு.க.கண்ணன், மாநில இளைஞரணி செயலர் திரு.சு.க.சங்கர் இவர்களோடு மாவட்ட செயலர் திரு.இரா.வே.மனோகர் விவசாயிகள், விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர். திரு.ஸ்ரீரங்கன், சி.பி.ஐ.எம்.எல் யைச் சேர்ந்த தோழர் செந்தூர்பாண்டி ஆகியோர் இந்த ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டனர். 1) படர்ந்தபுளி ஊராட்சியில் வசிக்கும் அருந்ததியர் மக்களின் கருத்தை கேட்காமல் இராமனூத்து ஊராட்சியில் சேர்த்திருப்பது தற்போது இரு ஊராட்சிகளாலும் புறக்கனிக்கப்பட்டுள்ளது. இவர்களின் அடிப்படைத் தேவைகளை முடக்கி வைத்ததைக் கண்டித்தும், 2) படர்ந்தபுளி அருந்ததியர் மக்களின் குடிநீர் ஆதாரத்திற்கு என ஒதுக்கப்பட்ட ஒரு இலட்ச ரூபாயை முறையாக பயன்படுத்தி முடங்கிக்கிடக்கும் குடிநீர்திட்டப் பணிகளை விரைவாக பூர்த்தி செய்து தரக்கோரியும், 3) கோடாங்கிபட்டி ஊராட்சி கிராமத்தில் அதிகார வெறியுடன் செயல்பட்டு வரும் விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் கோடாங்கிபட்டி பாலசுப்பிரமணியன் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கக் கோரியும், 4) கோடாங்கிபட்டியில் வார்டு உறுப்பினராக இருக்கும் அருந்ததியர் தோழர்மீது ஊராட்சிமன்ற கூட்டத்தில் கடைபிடிக்கப்படும் தீண்டாமைக்கு முடிவு கட்டக்கோரியும், 5) கோடாங்கிபட்டி அருந்ததியர் மக்களின் தொகுப்பு வீடுகளின் மேற்கூரையை விரைவாக சீரமைத்தும் அவர்களுக்கு சீரான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கக்கோரியும், 6) விளாத்திகுளம் பேரூராட்சியில் துப்புரவு பணியாளர்களுக்கு நாளுக்கு நாள் பணிச்சுமை அதிகரிப்பதை கண்டித்தும் துப்புரவு பணிக்காக நியமிக்கப்பட்ட ரமேஸ், மூக்கையா, மகாராஜன் ஆகியோர் சாதியின் காரணமாக மாற்றுப்பணி செய்வதும் இதற்கு

ஆதரவாக செயல்படும் பேரூராட்சி அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்கக் கோரியும் நடைபெற்ற இந்த மாபெரும் கண்டன ஆர்பாட்டத்திற்கு ஆதித்தமிழர் பேரவையினர் தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளாக கலந்து கொண்டு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்பாட்டத்தின் இறுதியில் தோழர். ஸ்டாலின் ஆதித்தியன் நன்றியுரை கூறி நிறைவு செய்தார்.

**விளாத்திகுளம் ஒன்றிய செயலர்,**
**க. திலீபன்**